மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோன்று அவர்களிடம் இருந்து விண்ணப்பம் வந்தால் கல்வித்துறை இதுபற்றி ஆராயும்.

(திரு நா. வீராசாமி தலைமை)

Advisory Committee for Eye Camp Fund.

*** 86Q.— THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Public Health be pleased to state the details of the compostion of the panel set up to administer the 'Eye Camp Fund' in this State ?**

மாண்புமிகு திரு க. அன்பழகன் "முதல்வர் கண் சிகிச்சை முகாம் நிதி"யைப் பராமரிக்க ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. அவ்வாலோசனைக் குழுவிலிருக்கும் அரசு அலுவலர்கள் மற்றும் அரசு சார்பற்றவர்கள் பின்வருமாறு :—

1 மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்—தலைவர்.

2 திரு எம். ஏ. எம். ராமசாமி, ஷெரீப், சென்னை—உறுப்பினர்.

3 திரு எஸ். முத்து, மதுரை நகரத் தந்தை—உறுப்பினர்.

4 திரு என். மகாலிங்கம், தொழிலதிபர், பொள்ளாச்சி—உறுப்பினர்.

5 திரு ஏ. ஆர். ராமசாமி, கும்பகோணம்—உறுப்பினர்.

6 செயலர் மக்கள் நல்வாழ்வு, குடும்ப நலத்துறை—உறுப்பினர்.

7 இயக்குநர், மருத்துவக் கல்வித்துறை—உறுப்பினர்.

8 இயக்குநர், மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை—உறுப்பினர்.

9 துணைச் செயலாளர், நிதித்துறை,—உறுப்பினரும் பொருளாளரும்.

10 துணைச் செயலாளர், மக்கள் நல்வாழ்வு, குடும்பநலத்துறை, செயலர்—உறுப்பினர்.

திரு வை. பாலசுந்தரம் : தலைவர் அவர்களே, கண் ஒளி பெற வேண்டியவர்கள் தமிழகத்தில் பத்து லட்சம் பேர் இருக்கிறார்கள் என்பது வரையறுக்கப்பட்டிருக்கிறது. இவர்களுக்கு எல்லாம் கண்ணொளி வழங்குகிற திட்டம் எத்தனை ஆண்டுகளில் இந்த அரசினால் பூர்த்தி செய்யப்படும்? இதற்கு ஏராளமாகச் செலவாவதனால் மத்திய சர்க்காரிடம் இருந்தும் இதற்கான உதவியைப் பெற நமது அரசு முயற்சி எடுத்துக் கொள்ளுமா?

1973 பிப்ரவரி 9]

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தமிழகத்தில் 6 லட்சம் பேர் இரண்டு கண்களிலும் மங்கிய ஒளி உடையவர்களாகவும், 4 லட்சம் பேர் ஒரு கண் மங்கிய ஒளி உடையவர்களாகவும் இருக்கிறார்கள் என்பதாக ஒரு புள்ளி விவரம் அரசாங்கத்தினிடம் இருக்கிறது. ஒரு ஆண்டுக்கு ஏறத்தாழ ஒரு லட்சம் பேர்களுக்கு கண்ணொளி வழங்கப்படுகிறது என்றாலும் இவர்கள் அத்தனை பேர்களுக்கும் கண்ணொளி வழங்க ஒரு பத்தாண்டுக் காலமாவது ஆகக்கூடும். புதியதாக ஆண்டு ஒன்றுக்கு பல ஆயிரம் பேர்களாவது கண்ணொளி மங்கிய நிலையில் இந்தப் பட்டியலில் வந்து சேர்ந்துகொள்ள நேரும். ஆகவே இந்தத் திட்டத்தை தீவிரமாகச் செயல்படுத்துகிற பெரு முயற்சியின் காரணமாக, பொதுமக்கள் பெறவேண்டிய அறிவையும், அனுபவத்தையும் பெறச் செய்வதன் மூலமாகவே ஐந்தாண்டு, எட்டாண்டுக்குள் இந்தத் திட்டத்தினை வெற்றிகரமாகச் செயல்படுத்திவிட முடியுமா என்பதை எண்ணிப் பார்க்கவேண்டிய நிலையில் இருக்கிறோம். ஆனால் உலகத்திலேயே ஏறத்தாழ பத்து சதவிகிதத்தினர்கள் போதுமான சத்து உணவு இல்லாத காரணத்தினால் கண்ணொளி பாதிக்கப்பட்டவர்களாகிறார்கள் என்றும், வயதின் காரணமாக காட்டராக்ட் காரணமாக கண்ணொளி இழந்தவர்கள், கண்ணிழந்தவர்களில் பாதிப்பேர் இருக்கிறார்கள் என்றும் புள்ளிவிவரம் தருகிறது. நம்முடைய பெரு முயற்சியின் காரணமாக பத்துப் பேர்களில் 2 பேர்களுக்காவது கண் பார்வையை மீண்டும் பெற நிச்சயமாக வசதி ஏற்படும்.

திரு ஜே. ஜேம்ஸ்: கண்ணொளி வழங்கும் திட்டத்திற்கு நிதி வசூல் செய்வதில் முறைகேடான போக்கு இருக்கிறது. முறைகேடு இல்லாத முறையில் நிதி வசூல் செய்ய........

மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவர் அவர்களே, எதை எடுத்தாலும் முறைகேடு என்று பேசுவது முறைகேடான பேச்சாகும். இதிலே எது முறைகேடு என்பதை குறிப்பிட்டுத் தெரிவிக்க வேண்டும். முறைகேடு என்று பொதுவாகச் சொல்வதனால் பயன் இல்லை. குறிப்பிட்ட முறைகேடு இன்னது என்று அவருக்குத் தெரிந்திருந்தால், அதைச் சொல்லாமல் மறைத்த குற்றத்திற்கும் ஆளாகி அதை வெளியிடத் தவறிவிட்டவரும் ஆவார். எவ்வளவு பெரிய பணக்காரர்களாக இருந்தாலும் யாரும் தாமே வலிய வந்து உதவி செய்வது கிடையாது. கோயில் திருப்பணியாகட்டும், மற்ற வேறு எந்த நல்ல காரியங்கள் ஆகட்டும், போய்க் கேட்டேதான் நிதி திரட்ட வேண்டியிருக்கிறது. கேட்பவர்களுக்குக் கொடுத்துவிட்டு, பிறகு கொடுத்தேன், கொடுத்தேன் என்று சொல்லிக் கொள்ள விரும்பிக் கொடுப்பவர்களும் இருக்கிறார்கள். ஒரு நல்ல காரியத்திற்காக கேட்டுப் பெற வேண்டிய முயற்சியை உற்சாகப்படுத்தாது, முறைகேடு என்று குற்றம் சாட்டுவது மனிதாபிமானத்தையே சந்தேகிக்க வைப்பதாக இருக்கும்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர்: (திரு நா. வீராசாமி) கேள்வி நேரத்தில் கேள்விதான் கேட்க வேண்டும். குற்றச்சாட்டுகள் சொல்லக் கூடாது என்று ஏற்கனவே பல தீர்ப்புகள் இங்கே கொடுத்திருக்கிறார்கள்.

திரு ஆர் பொன்னப்ப நாடார் : கண்ணொளி மங்குவதற்கு சத்துணவுக் குறைவு ஒரு காரணமாக இருக்கிறது என்றார்கள். சத்துணவுக் குறைவைத் தடுப்பதற்கு அரசாங்கம் ஏதேனும் திட்டம் தீட்டியிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன். அப்படியிருந்தால் அதன் விவரத்தைத் தெரிவிக்க வேண்டும்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : கேர் நிறுவனத்தார் கொடுக்கிற உதவியுடன் 10 வயது, 5 வயது, 3 வயது உடைய குழந்தைகளுக்குச் சத்து உணவு வழங்கும் திட்டம் உள்ளது. அவர்களில் ஒரு பகுதி மாணவர்களுக்குத்தான் இந்த உணவு கிடைக்கிறது. அந்தச் சத்து உணவும் கூட

It is only to rectify the deficiency that is created in the natural diet of the children"

என்கிற முறையில் அவர்கள் உண்கிற இயற்கையான உணவில் உள்ள சத்துக் குறைவை கொஞ்சம் ஈடு செய்யக்கூடியதாக இருக்கிறதே தவிர இதுவே நிறைவான உணவு அல்ல. எத்தகைய சத்து உணவு தேவை என்பது பற்றிய பொது அறிவு பெரும்பாலானவர்களிடையே இல்லாத ஒரு குறைபாடும் இருக்கிறது. அதற்காகத்தான் மதுரை டாக்டர் வெங்கடசாமி அவர்கள் ஆலோசனையில் குழந்தைகளுக்கு எத்தகைய சத்து உணவு வழங்கப்பட வேண்டும் என்கிற ஆலோசனையே மக்களுக்கு வழங்குவதற்காக பயிற்சி கொடுக்கிற ஒரு திட்டமும் ஏற்பட்டு இருக்கிறது. பொது மக்களும் எந்த அளவுக்கு இதில் நல்ல அறிவும், அனுபவமும் பெற்றுத் தெளிவு அடைகிறார்களோ, அந்த அளவுக்குத்தான் இந்தத் திட்டம் வெற்றிபெற முடியும்.

Specialists for taluk hospitals.

***87Q.— Thiru N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether steps have been taken for the appointment of eye specilists and E. N. T. specialists in the taluk Headquarters Hospitals in this State ?**

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவர் அவர்களே, இச்சிறப்புப் பிரிவுகளை மாவட்ட, வட்ட, வட்டமல்லாத மருத்துவ மனைகளில் மூன்று காலகட்டங்களில் திறக்கும் செயற்குறிப்பு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. முதலில் மாவட்ட மருத்துவமனைகளும் பிறகு வட்ட மருத்துவ மனைகளும் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன.

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS